## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் ஊழியத்துக்கமர்த்துதல், தொழிற்சாலைகள், கடை, அலுவலக ஊழியர்கள் (ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்

---

*[1984, ஓகத்து மாதம் 03 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, ஓகத்து மாதம் 03 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 90* *தபாற் செலவு : சதம் 60*

# 1984 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் ஊழியத்துக்கமர்த்துதல், தொழிற்சாலைகள், கடை, அலுவலக ஊழியர்கள் (ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்

[1984 ஓகத்து மாதம் 03 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஏ. 22/83
1598

**தொழிற்சாலைகளிலும் கைத்தொழில் பொறுப்பு முயற்சிகளிலும் இரவில் பெண்களை ஊழியத்திலமர்த்துவதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; இரவில் வேலை பார்க்கும் பெண்களின் பாதுகாப்பிற்கு வேண்டிய காப்பு வழிவகைகளுக்கு ஏற்பாடுசெய்வதற்கும்; அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் ஊழியத்துக்கமர்த்துதல், தொழிற்சாலைகள், கடை, அலுவலக ஊழியர்கள் (ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

## பாகம் I

2. (இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் ஊழியத்துக்கமர்த்துதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்குஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஆள் எவரும் இரவில் எந்நேரத்திலும், ஒரு பகிரங்க அல்லது தனியார் கைத்தொழில் பொறுப்பு முயற்சியில் அல்லது அதன் ஒரு கிளையில், பதினெட்டு வயதிற்குக் குறைந்த ஆள் ஒருவரை ஊழியத்திலமர்த்துதலாகாது.".

3. பின்வரும் புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அவை முறையே அச்சட்டவாக்கத்தின் 2அ, 2ஆ, 2இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ, 2ஆ, 2இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

"ஏதேனும் கைத்தொழில் பொறுப்பு முயற்சியில் இரவில் பெண்களை ஊழியத்திலமர்த்துதல். 2அ. (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஒரு கைத்தொழிற் பொறுப்பு முயற்சியில் ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு பெண்ணும் இரவு முழுவதும் வேலை பார்க்க அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

2—எ 077534—2,925 (06/84)

(2) இரவில் ஒரு பெண்ணை ஊழியத்திலமர்த்துவ தானது பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும் :—

(அ) பெண் எவரும் அவரின் விருப்பத்திற்கெதிராக இரவில் வேலை பார்க்குமாறு கட்டாயப்படுத் தப்படலாகாது ;

(ஆ) தொழில் ஆணையாளரின் எழுத்திலான அனுமதி தொழில் தருநர் ஒவ்வொருவராலும், இரவு 10.00 மணிக்குப் பின்னர் வேலை பார்ப்பதற்கு பெண்களை ஊழியத்திலமர்த்துவதற்கு முன்ன தாகப் பெறப்பட வேண்டும் ;

(இ) முற்பகல் 6.00 மணிக்கும் பிற்பகல் 6.00 மணிக் கும் இடைப்பட்ட காலத்தின்போது ஊழி யத்திலமர்த்தப்பட்டுள்ளவரான பெண் எவ ரும் ஏதேனும் நாளில் பிற்பகல் 10.00 மணிக் குப் பின்னர் ஊழியத்திலமர்த்தப்படுத லாகாது ;

(ஈ) இரவில் வேலைபார்க்கும் ஒவ்வொரு பெண்ணுக் கும் அவருக்குக் கிடைக்கும் வழமையான கொடுப்பனவின் ஒன்றரை மடங்கிற்குக் குறையாதவொரு கொடுப்பனவு கிடைத்தல் வேண்டும் ;

(உ) இரவில் வேலை பார்க்கும் பெண் வேலையாளர் களின் நலனைக் கவனிப்பதற்கென பெண் பால கர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) இரவில் வேலை பார்க்கும் ஒவ்வொரு பெண் வேலையாளருக்கும் தொழில்தருநரால் ஓய் வறைகளும் சிற்றுண்டிகளும் ஏற்பாடுசெய்யப் படுதல் வேண்டும் ;

(எ) பெண் எவரும் ஏதேனும் ஒரு மாதத்தில் பத்து நாட்களுக்கு மேலாக இரவு வேளையில் ஊழி யத்துக்கமர்த்தப்படுதலாகாது.

2அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் பொறுப்பான பதவிகள் முத லியவற்றை வகிக்கும் பெண்களுக்கு ஏற்புடையன வாகா

2ஆ. பிரிவு 2அ என்பதன் ஏற்பாடுகள்—

(அ) முகாமைத்தன்மைத்தான அல்லது தொழில் நுட்பத் தன்மைத்தான பதவிகள்போன்ற பொறுப்பான பதவிகளை வகிக்கும் பெண் களுக்கும் ;

(ஆ) சாதாரணமாக உடல் உழைப்பில் ஈடுபடா திருப்பவர்களான சுகாதார மற்றும் நலன் புரிசேவைகளில் ஊழியத்திலமர்த்தப்பட் டுள்ள பெண்களுக்கும் ; அத்துடன்

(இ) ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மாத்திரம் ஊழியத்திலமர்த்தப்பட்டிருக்கும் ஒரு கைத்தொழில் பொறுப்பு முயற்சிக்கும்,

ஏற்புடையவாகா.

அமைச்சர், கைத்தொழில் பொறுப்பு முயற்சிகளில் பெண்களை இரவில் ஊழியத்தி லமர்த்து வதைத் தடைசெய்ய லாம்.

2இ. நெருக்கடியான அவசர நிலைமையின் விடயத்தில் பொதுமக்கள் நலன் தேவைப்படுத்துமாயின் அமைச்சர், சம்பந்தப்பட்ட தொழில் தருநர் ஒழுங்கமைப்புகள், வேலையாளர் ஒழுங்கமைப்புக்கள் எவையேனும் இருப்பின், அவற்றுடன் கலந்தாலோசனை செய்த பின்னர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், ஏதேனும் கைத்தொழில் பொறுப்பு முயற்சியில் அல்லது பொறுப்பு முயற்சிகளில் அல்லது அதன் அல்லது அவற்றின் கிளைகளில் இரவில் பெண்களை ஊழியத்திலமர்த்துதல் தொடர்பாக, 2அ என்னும் பிரிவில் தரப்பட்ட நிபந்தனைகளை வேறுபடுத்தலாம், அல்லது பெண்களை அவ்வாறு ஊழியத்திலமர்த்துவதைத் தடைசெய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ் செய்வதன்மூலமும்;

(2) அதன் (6) ஆம் உட்பிரிவில், " ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள பெண் அல்லது இளம் ஆள் எவரும்" என்பது தொடங்கி " அக்காலப் பகுதியின்போது பெண்களையும் இளம் ஆட்களையும் அவ்வாறு ஊழியத்திலமர்த்துதலை" என்பது முடியவுள்ள சொற்கள், இலக்கங்கள் எல்லாவற்றிற்கும் பதிலாக, " ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள இளம் ஆள் எவரும் பிற்பகல் 11.00 மணியை உடனடுத்து வரும் பதினொரு மணித்தியாலங்களின்போது எந்த நேரத்திலும் அத்தகைய பொறுப்பு முயற்சியில் அல்லது கிளையில் வேலைபார்க்க தேவைப்படுத்தப்படுதல் அல்லது அனுமதிக்கப்படுதல் ஆகாது என்ற நிபந்தனைக்கமைவாக பிற்பகல் 7.00 மணிக்கும் பிற்பகல் 11.00 மணிக்கும் இடைப்பட்ட இரவின் அக்காலப்பகுதியின்போது இளம் ஆட்களை அவ்வாறு ஊழியத்திலமர்த்துதலை" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

## பாகம் II

128 ஆம் அத்தியாயத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவு, அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்வதன் மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) பதினாறு வயதையடையாத இளம் ஆட்களின் விடயத்தில் ஊழியத்திலமர்த்துகைக் காலப்பகுதி ஏதேனும் நாளில் பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு மேற்படாததாக இருக்கவேண்டும் என்பதுடன், காலையில் ஆறு மணிக்கு முன்னர் ஆரம்பித்தலோ அன்றி மாலையில் ஆறு மணிக்குப் பின்னர் முடிவடைதலோ ஆகாது, அத்துடன், பதினெட்டு வயதையடையாதிருக்கும் இளம் ஆட்களின் விடயத்தில், ஊழியத்திலமர்த்துகைக் காலப்பகுதி மாலையில் எட்டு மணிக்குப் பிந்தி முடிவடைதல் ஆகாது என்பதுடன், ஒரு வாரத்தில் ஒரு நாளுக்குக் குறையாமல் பிற்பகல் ஒரு மணிக்குப் பிந்தி முடிவடைதலும் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 67அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது அச் சட்டவாக்கத்தின் 67அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"தொழிற்சாலையொன்றில் அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சியொன்றில் இரவில் பெண்களை ஊழியத்திலமர்த்துதல்.

67அ. (1) இப்பாகத்தினது ஏற்பாடுகளுக்கமைவாக, தொழிற்சாலையொன்றில் ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு பெண்ணும் இரவு முழுவதும் வேலை பார்க்க அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) தொழிற்சாலையொன்றில் இரவில் ஒரு பெண்ணை ஊழியத்திலமர்த்துவதானது பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும் :—

(அ) பெண் எவரும் அவரின் விருப்பத்திற்கெதிராக இரவில் வேலைபார்க்குமாறு கட்டாயப்படுத்தப்படலாகாது ;

(ஆ) இரவில் பிற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் வேலை பார்ப்பதற்குப் பெண்களை ஊழியத்திலமர்த்துவதற்கு முன்னதாக தொழில் ஆணையாளரின் எழுத்திலான அனுமதி தொழிற்சாலையொன்றின் இருப்பாட்சியாளர் ஒவ்வொருவராலும் பெறப்பட வேண்டும் ;

(இ) முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரையிலான காலத்தின்போது ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ளவரான பெண் எவரும் ஏதேனும் நாளில் பிற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் ஊழியத்திலமர்த்தப்படுதல் ஆகாது ;

(ஈ) இரவில் வேலை பார்க்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் அவருக்குக் கிடைக்கும் வழமையான கொடுப்பனவின் ஒன்றரை மடங்கிற்குக் குறையாதவொரு கொடுப்பனவு கிடைத்தல் வேண்டும் ;

(உ) இரவில் வேலை பார்க்கும் பெண் வேலையாளர்களின் நலனைக் கவனிப்பதற்கென பெண் பாலகர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) இரவில் வேலை பார்க்கும் ஒவ்வொரு பெண் வேலையாளருக்கும் தொழில்தருநரால் ஓய்வு அறைகளும் சிற்றுண்டிகளும் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் ;

(எ) பெண் எவரும் ஏதேனும் ஒருமாத காலத்தில் பத்து நாட்களுக்கு மேலாக இரவு வேலை ஊழியத்திலமர்த்தப்படுதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்வதன் மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) பெண்ணை அல்லது இளம் ஆளை ஊழியத்திலமர்த்துவதற்கான காலப்பகுதி ஏதேனும் நாளில் பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன், இளம் ஆட்களின் விடயத்தில், ஊழியத்திலமர்த்துகைக் காலப்பகுதி ஆரம்பிப்பதற்கும் முடிவடைவதற்குமென இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட மணித்தியாலங்களுக்கும் அப்பால் நீடிக்காதிருத்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அ) இளம் ஆளொருவர் ஞாயிற்றுக்கிழமையன்று அல்லது ஞாயிற்றுக்கிழமைக்குப் பதிலாக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கிழமை நாளன்று தொழிற்சாலையொன்றில்

ஊழியத்திலமர்த்தப்படுதலாகாது; அத்துடன் வாரத்தில் வேறு ஏதேலும் நாளன்று ஏதேனும் தொழிற்சாலையில் ஊழியத்திலமர்த்தப்பட்ட இளம் ஆளொருவர், ஞாயிற்றுக்கிழமையன்று அல்லது அத்தகைய விதித்துரைக்கப்பட்ட கிழமை நாளன்று அத்தொழிற்சாலையின் அலுவல் சம்பந்தமாக அல்லது இருப்பாட்சியாளரினால் கொண்டு நடாத்தப்படும் வேறு ஏதேனும் அலுவலில் ஊழியத்திலமர்த்தப்படுதல் ஆகாது ; அத்துடன்.".

## பாகம் III

*129 ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

9. கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும், ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (iii) பதினெட்டு வயதையடைந்துள்ள எவரேனும் ஒரு பெண் பிற்பகல் 6.00 மணிக்கும் பிற்பகல் 8.00 மணிக்குமிடைப்பட்ட காலப்பகுதிக்கு அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்கு கடையொன்றின் அல்லது அலுவலகமொன்றின் அலுவலில் அல்லது அலுவல் சம்பந்தமாக ஊழியத்திலமர்த்தப்படலாம்,"; அத்துடன்

(2) காப்பு வாசகத்தின் (iii) ஆம் பந்தியை அதன் (iv) ஆம் பந்தியென மீள இலக்கமிடுவதன் மூலமும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.